NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu, p2*
**Date:** 9 August 2022

## இந்த ஆண்டு மொத்தம் 6,258 பேருக்கு தேசிய தின விருது; 3,600 பேர் நீண்ட கால சேவை விருது பெறுகிறார்கள்

# கோபிநாத் பிள்ளைக்கு உயரிய சிறப்பு

நீண்டகாலம் பொதுச் சேவை ஆற்றி இருக்கும் மூன்று சிங்கப்பூரர்களுக்கு, பல ஆண்டு காலமாக அவர்கள் நாட்டிற்கு ஆற்றியிருக்கும் தொண்டூழியப் பணியை அங்கீகரித்துப் பாராட்டும் வகையில், சிங்கப்பூரின் தலைசிறந்த தேசிய விருதுகளில் ஒன்றான ‘மதிப்பிற்குரிய சேவை விருது’ வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

முன்னாள் அரசதந்திரியும் இந்திய மரபுடைமை நிலைய ஆலோசனை சபையின் முன்னாள் தலைவருமான கோபிநாத் பிள்ளை, 84, பொதுச் சேவை ஆணையத்தின் தலைவர் லீ ஸு யாங், 67, சுகாதார அமைச்சின் தலைமை சுகாதார அறிவியல் வல்லுநர் பேராசிரியர் டான் சோர் சுவான் ஆகியோர் அந்த மூவர்.

இந்த ஆண்டின் தேசிய தின விருது மொத்தம் 6,258 பேருக்கு வழங்கப்படுகிறது. மெச்சத்தக்க சேவை விருதை நால்வரும் பொதுச் சேவை நட்சத்திர (பார்) விருதை 15 பேரும் பெறுகிறார்கள். பொதுச் சேவை நட்சத்திர விருது 67 பேருக்கு வழங்கப்படுகிறது.


திரு கோபிநாத் பிள்ளை

பொது நிர்வாக தங்கப் பதக்கத்தை (பார்) ஒருவர் பெறுகிறார்.

பொது நிர்வாக தங்கப் பதக்கம் ராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட 10 பேருக்குக் கிடைக்கும்.

பொது நிர்வாக வெள்ளிப் பதக்கம் (பார்) ஆறு பேருக்கும் பொது நிர்வாக வெள்ளிப் பதக்கம் 134 பேருக்கும் வழங்கப்படும்.


பொதுச்சேவை நட்சத்திர விருது பெறும் குமாரி சித்ரா துரைசாமி


பொதுச்சேவை நட்சத்திர விருது பெறும் திருவாட்டி செல்வராணி


பொதுச்சேவை நட்சத்திர விருது பெறும் திரு ராஜசேகரன்


பொதுச்சேவை நட்சத்திர (பார்) விருது பெறும் திரு ஜெயராம்

இந்தப் பதக்கம் பெறுவோரில் 15 பேர் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள். அதுபோல் பொது நிர்வாக வெண்கலப் பதக்கம் ராணுவத்தைச் சேர்ந்த 28 பேர் உட்பட மொத்தம் 303 பேருக்குக் கொடுக்கப்படும்.

அதேபோல் ராணுவத்தைச் சேர்ந்த 93 பேர் உட்பட மொத்தம் 1,019 பேர் பாராட்டுப் பதக்கத்தைப் பெறுவர்.

அதேபோல் 188 பேர் பொதுச் சேவை விருது பெறுவர்.

ராணுவத்தைச் சேர்ந்த 122 பேர் உட்பட மொத்தம் 908 பேர் பாராட்டுப் பதக்கமும் ராணுவத்தைச் சேர்ந்த 430 பேர் உட்பட 3,600 பேர் நீண்ட கால சேவை விருதும் பெறுவர்.

ஹாலந்து புக்கிட் தீமா குழுத் தொகுதியைச் சேர்ந்த செஞ்சா கேஷியூ சமூக மன்ற நிர்வாகக் குழுவின் துணைத் தலைவரான ஜெயராம், பொதுச் சேவை நட்சத்திர (பார்) விருது பெறுகிறார்.

ஹாலந்து- புக்கிட் தீமா குழுத் தொகுதியைச் சேர்ந்த ஸெங்ஹுவா சமூக மன்ற நிர்வாகக் குழுவின் தலைவரான திருவாட்டி செல்வராணி, புக்கிட் பாத்தோக் சமூக மன்ற இந்தியர் நற்பணிச் செயற்குழுத் தலைவர் ராஜசேகரன், மக்கள் கழக நற்பணிப் பேரவையின் புரவலரான சித்ரா துரைசாமி ஆகியோர் பொதுச்சேவை நட்சத்திர விருது பெறுகிறார்கள்.

உள்துறை அமைச்சின் சமூக மறுவாழ்வு மையத்தின் வருகையாளர் கழகத்தின் துணைத் தலைவர் டாக்டர் பிரேம் குமார் நாயர், தேசிய வளர்ச்சி அமைச்சின் கட்டட, கட்டுமான ஆணையத்தின் நிர்வாக சபை உறுப்பினர் திருவாட்டி கலா ஆனந்தராஜா;

நீடித்த நிலைத்தன்மை, சுற்றுப்புற அமைச்சின் பொதுப் பயனீட்டுக் கழக நிர்வாக சபை உறுப்பினர் திரு தியாகராஜன், பிரதமர் அலுவலக அரசாங்கச் சேவை ஆணையத்தின் உறுப்பினர் டாக்டர் சுதா நாயர் ஆகியோரும் இந்த விருதைப் பெறுகிறார்கள்.

அரசு நீதிமன்றங்களின் வழக்கு விசாரணை நீதிபதி அலுவலகத்தைச் சேர்ந்த முன்னாள் துணை வழக்கு விசாரணை நீதிபதியான திருவாட்டி சூரியகலா ஜெனிஃபர் மேரிக்கு பொது நிர்வாகப் (தங்கம்) (பார்) பதக்கம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த துணை நிர்வாக இயக்குநர் (பொருளியல் கொள்கை) எட்வர்ட் சுரேந்திரன் ராபின்சன், பொது நிர்வாகப் பதக்கம் (தங்கம்) பெறுகிறார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.